திவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 சிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 21 (3—6—68) திங்கள் ★ வெளியூர்: வைகாசி 22 (4—6—68) செவ்வாய் [இதழ்: 293

மறந்தனரோ என்னவோ!

புதுடில்லி, ஜூன் 2—

அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டி நடைபெற்றபோது, தலைவர்கள் அமர்ந்திருந்த மேடையில் நேருவின் படமோ அல்லது லால் பகதூர் சாஸ்திரியின் படமோ காணப்படவில்லை! காங்கிரசுக் கொடி மட்டும் காட்சியளித்தது!

சாந்தியின் உருவப் படம் மேடையில் இடம்பெற்றிருந்தது; அவையினரை நோக்கி முதுகைக் காட்டும் நிலையில் காந்தியின் படம் சித்தரிக்கப்பட்டிருந்தது!

கலைஞர் கருணாநிதி
வாழ்க--வளர்க--வெல்க!

சென்னை, ஜூன் 3—

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும் தமிழக அரசின் பொதுப் பணித்துறை அமைச்சருமான மு. கருணாநிதி அவர்சட்கு 44 வயது முடிவடைந்து இன்று 45-வது வயது தொடங்குகிறது.

தஞ்சை மாவட்டம் திருவாரூரையடுத்த திருக்குவளை என்னும் சிற்றூரில் முத்துவேலர்—அஞ்சுகம் தம்பதிசட்கு 1924-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ஆம் நாள் பிறந்தார்.

திரு. கருணாநிதி அவர்கள், திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்றார்.

தமது பள்ளிப் பருவத்திலேயே தமிழில் நல்ல ஆர்வமும் ஆற்றலும் படைத்தவராய்த் திகழ்ந்ததுடன், பேச்சு வன்மையும் எழுத்து வன்மையும் உடைய மாணவராகத் திகழ்ந்தார்.

நீதிக் கட்சி--சுயமரியாதை இயக்கம்—திராவிடர் கழகம்—ஆகியவற்றின் கோட்டையாகத் திகழ்ந்த திருவாரூரில் இயக்கக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட இளைஞர் கருணாநிதி, தம் ஆற்றலாலும் அருந்தொண்டுகளாலும் தலைவர் பெரியார்—'தளபதி' அண்ணா ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தார்.

மாணவராக இருந்தபோதே இயக்கக் கருத்துக்களைத் தம் எழுத்தாலும் பேச்சாலும் பரப்பிட முனைந்த கருணாநிதி, தம் எழுத்துப் பணிக்கென 'முரசொலி' என்ற சிறு வெளியீட்டையும் (பத்திரிகை) துவக்கினார். பல நாடகங்கள் எழுதி நாடகக் குழுக்களுக்குக் கொடுத்ததுடன், தாமே சில நாடகங்களிலும் பங்கேற்று நடித்தார். இதனால் கருணாநிதியை நாடறிந்தது. திராவிட இயக்கத்துக்குக் கிடைத்த சிறந்த முத்துக்களில் ஒன்றாகக் கருணாநிதி கிடைத்தார்.

பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோதே பத்திரிகை நடத்திப் பயிர்சி பெற்றிருந்த கருணாநிதியை, பள்ளிப் படிப்பு முடிந்ததும் கொத்திக்கொண்டு போய்விட்டார் பெரியார்; தமது 'குடியரசு' வார இதழின் துணையாசிரியராக அவ[illegible] அமர்த்திக்கொண்டார்.

ஈரோட்டில் தங்கி எழுத்துப் பணியும் இயக்கப் பணியும் [illegible]ண்டிருந்த இளை[illegible]நிதி கலந்[illegible]

[illegible]

'எங்கு இருப்பினும் இயக்கப் பணியே என் மூச்சு' என்ற இலட்சியத்தையுடைய கருணாநிதி, திரைப் படக் கதை--வசனங்களிலும் பெரியார், அண்ணா கருத்துக்களைப் புகுத்தி, நாட்டு மக்களின் பாராட்டையும் பெற்றார்; 'கலைஞர்' என்ற சிறப்புக்கும் உரியவரானார்.

பள்ளியில் பயின்ற காலத்திலேயே தென்மண்டலத் திராவிட மாணவர் கழக மாநாட்டை திருவாரூரிலே கூட்டி, மாணவர் இயக்கத் தோற்றத்திற்கு உரமூட்டினார்.

ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு இயக்கத்தில்—மாணவனாக இருந்த நிலையிலும்—பெரும் பங்கு கொண்டு, மாணவரிடையே இந்தி

எதிர்ப்பு உணர்ச்சியை ஏற்படுத்தினார்.

பெரியாருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து அறிஞர் அண்ணா அவர்கள் தி. மு. கழகம் கண்ட நேரத்தில், திரு. கருணாநிதி அவர்கள், அண்ணாவுக்கு உறுதுணையாக இருந்தார்.

தி. மு. கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் ஒரு முனையான கல்லக்குடிப் போராட்டத்துக்குத் தலைமை [illegible]ற்று, அன்[illegible] அரசினர் [illegible] ஆளா[illegible]

[illegible] நடத் [illegible]ட்டங் [illegible]கேற்று [illegible]றகளையெல் [illegible]டன் ஏற்றி

[illegible] நடந்த இந்தி [illegible]ப்புக் கிளர்ச்சியின் போது, பழிக்கஞ்சா பக்தவத்சலனார் குறிவைத்து ஏவிய அடக்குமுறைக்கு இலக்காகி, பாதுகாப்புச் சட்டப்படி பாளையங்கோட்டைத்

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசுக் கட்சிக்குள் 'எசமானத்துவம்'

'அம்முறைக்குக் காங்கிரசுத் தலைவர்கள் ஆக்கம் அளிக்கின்றனர்'

அ. இ. கா. குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன் 2—

அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுவின் கூட்டம், புதுடில்லியில், காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா தலைமையில் துவங்கியது. இக் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்று. அறுபதுக்கு மேற்பட்ட குழு உறுப்பினர்கள், ஏற்கனவே, தலைவருக்கு விண்ணப்பித்துக்கொண்டிருந்தனர்.

'கூட்டத்தை உடனடியாகக் கூட்டவேண்டும்' என விண்ணப்பித்துக்கொண்டவர்களில், நாடாளுமன்ற காங்கிரசுக் குழுவின் துணைத் தலைவர் பொறுப்பில் இருக்கின்ற எஸ். என். மிஸ்ரா என்பவர் முதன்மையானவர். தற்சமயம் நாட்டில் இருந்துவருகின்ற 'அரசியல் நெருக்கடி' பற்றி ஆராயவேண்டும் என்பதைக் காரணமாகக் காட்டி, அ. இ. கா. குழுக் கூட்டத்தைக் கூட்டவேண்டுமென மிஸ்ரா தலைமையில் கோரப்பட்டிருந்தது.

கூட்டம்துவக்கப்பட்டதும்,எஸ் கே. பாட்டீல், நடைமுறையிலுள்ள காங்கிரசுக் கட்சி விதியில் முக்கியமான மாற்றம் செய்யக் கோரி திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

அனைத்திந்தியக் குழுவின் முதல் கூட்டத்திலேயே, குழு உறுப்பினர்களிலிருந்து காங்கிரசுத் தேர்தல் குழுவிற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அத்தேர்தல் குழு, புதிய தேர்தல் குழு தேர்ந்தெடுக்கப்படுகின்ற வரையில் செயல்பட்டு வரவேண்டும் என்றும், நடைபெறக்கூடிய பொதுத் தேர்தல் அல்லது இடைத்தேர்தலில் அக்குழு செயல்பட வேண்டும் என்றும் பாடீலின் திருத்தம் கோரியிருந்தது.

'காங்கிரசு விதிகளில் திருத்தம் செய்யவேண்டும்' என்ற பாடீலின் திருத்தத் தீர்மானத்தை, 'குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்' எனக் கோரியிருந்த எஸ். என். மிஸ்ரா முழு மூச்சாக எதிர்த்து, எழுத்து மூலம் தாம் கோரியிருந்தபடி முதற்கண், 'அரசியல் நெருக்கடியை ஆராய வேண்டும்' எனக் கோ[illegible]னார்.

தங்களுடைய தீர்மானத்தை ஆராய பதினைந்து மணி நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கட்சி விதியில் திருத்தம் செய்ய வேண்டுமானால் ஒரு மாத முன்னறிவிப்புத் தேவைப்படுகிறது என்றும், மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால்தான் திருத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், மிஸ்ரா தமது ஆட்சேபணையில் குறிப்பிட்டிருந்தார்.

மிஸ்ராவின் கோரிக்கை, காங்கிரசுத் தலைவர் நடத்திய வாக்கெடுப்பில், பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் தோற்றுவிட்டது.

காங்கிரசு செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தமது திருத்தம், செயற்குழுக் கூட்டத்திற்குப் பின்னர் முதன் முதலாக நடைபெறுகின்ற காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்டிருப்பதாக பாட்டீல் குறிப்பிட்டார்.

காங்கிரசு விதிகளுக்குப் பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

திருத்தங்கள் கொண்டுவருவதை வாய்ப்பாகக் கொண்டு, காங்கிரசுக் கட்சிக்குள்ளாக 'எசமானத்துவ முறை' தலைதூக்கி இருக்கிறது என்றும், மாநில மட்டத்திலிருக்கக் கூடிய 'காங்கிரசு எசமானர்'களுக்கு இடமளிக்கும் முயற்சியில் காங்கிரசு மேலிடத் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் காங்கிரசுக் குழுவைச் சேர்ந்த பலர் குற்றஞ்சாட்டினர்.

வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர், பாடீல் அவர்களின் திருத்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் வசூலிக்கப்பட்ட நேரு நினைவு நிதிக் கணக்கு

மக்கள் முன்னிலையில் ஏன் வைக்கப்படவில்லை?

அமைச்சர் மு. கருணாநிதி எழுப்பும் கேள்வி

தஞ்சை, ஜூன் 2—

'1965 66-ல், நேரு நினைவு நிதிக்குத் தமிழகத்தின் பல மாவட்டங்களிலிருந்து ரூ. 50 இலட்சம் வரையில் வசூலிக்கப்பட்டது; இதுவரையில் மக்களின் முன்னிலையில் அதற்கான கணக்குகள் வைக்கப்படவில்லை.

'தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அந்த நிதிக்கு ரூ. 10 இலட்சம் வசூலிக்கப்பட்டது; ஜூலைத் திங்கள் முதல் நாளுக்குள், திரு. சி. சுப்பிரமணியம், அக் கணக்குகளை மக்கள் முன்பு வைப்பார் என நம்புகிறேன்"

என்று பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், திருக்காட்டுப்பள்ளியில் புதிய பேருந்து நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கோரினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

மக்கள்முன் நாங்கள் நிச்சயம் வைப்போம்

"உலகத் தமிழ் மாநாட்டுக்கு வசூலிக்கப்பட்ட நிதிபற்றிய கணக்குகள் இந்த மாத முடிவுக்குள் மக்கள்முன்பு வைக்கப்படும்; கணக்குகள் இப்பொழுது தணிக்கை செய்யப்படுகின்றன; ஜூன் 10-ம் நாளுக்குள் அது இறுதியாக்கப்படும்.

தமிழ் மாநாட்டுக்குப் பல்வேறு மாவட்டங்களில் ரூ. 54,79,564 மட்டுமே வசூலிக்கப்பட்டது; அதில் ரூ. 16-இலட்சம் தமிழ் மாநாட்டுக்கு அளிக்கப்பட்டது; எஞ்சிய தொகை, அந்தந்த மாவட்டங்களில் உள்ளன; அங்கு நலப் பணிகளுக்கு அவை பயன்படுத்தப்படும்.

உலகத் தமிழ் மாநாட்டின் ஏற்பாடுகள் குறித்து மாநாட்டுக்கு வந்த அந்நிய நாட்டினர் அனைவரும் மனநிறைவு தெரிவித்தனர்.

மாவட்டங்களிடமிருந்து கிடைத்த தொகையிலிருந்து தமிழ் வளர்ச்சிக்காக சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களுக்கு ரூ. 9-இலட்சம் கொடுக்கப்பட்டது."

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

விலை வீழ்ச்சியால் குறைந்தது

சென்னை, ஜூன் 3—

மே 18-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் நான்கு குறைந்து 679-ல் நின்றது.

காய்கறிகள், இறைச்சி, புளி, நல்லெண்ணெய் ஆகியவற்றின் விலைக் குறைவே இதற்குக் காரணம்.

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 21 (3—6—68) திங்கள்

அமைச்சரின் மோரீஸ் பயணம்

“நான் அந்த நாட்டுக்குச் சென்றதும். அங்கே தமிழ் வளர்ச்சி பெற வாய்ப்பிருக்கிறதா -- தமிழகத்தின் சார்பில் என்னென்ன நன்மைகளைச் செய்ய முடியும் -- என்பது குறித்து ஆராய்ந்து வருவேன்.

“நமது தமிழகத்தின் கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும், பழக்கவழக்கத்தையும் அவர்கள் முற்றிலும் மறந்துவிடாமல் இருக்கவும், அவர்களிடையே மறுமலர்ச்சி ஏற்படுத்தவும் வழிமுறைகளைக் கண்டுவரத்தான் நான் இந்தப் பயணத்தை மேற்கொள்ளுகிறேன்.

“அங்குள்ள தமிழ்க் குழந்தைகளுக்கு நமது மாநிலத்தில் தமிழ் படிக்க வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்பதனையும், நம்மில் சிலரை இங்கிருந்து அனுப்பி அங்கு தமிழை வளர்ச்சி பெறச் செய்ய முடியுமா என்பதனையும் நான் அறிந்து வருவேன்.”

மோரிசுத் தீவு என அழைக்கப்பட்டுவந்த மோரீஷியஸ் தீவுச்கு நமது அரிசன நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் நல்லெண்ணத் தூதுவராகச் செல்லுகின்ருர். ‘பயணம் வெற்றிகரமாக அமைந்திட வேண்டும்’ என அமைச்சர் அவர்களை வாழ்த்தியும் பாராட்டியும் நடைபெற்ற கூட்டத்தில், அங்கு சென்று தாம் ஆற்ற விரும்புகின்ற பணி குறித்து அமைச்சர் குறிப்பிட்டிருப்பதைத்தான், துவக்கத்தில் எடுத்துக் காட்டி இருக்கின்ருேம்.

மோரீஷியஸ் தீவு அண்மையில்தான் சுதந்தரம் பெற்றுள்ளது அத்தீவின் குடிமக்களில் பெருந் தொகையினர், தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ் மக்களாவர். இப்பொழுது அங்கு வாழ்ந்துவருகின்ற தமிழ் மக்கள் அனைவரும் தமிழகத்திலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்னர் அத்தீவுக்குக் குடியேறிய தமிழ் மரபினரின் வழித்தோன்றல்கள் ஆவர்.

இந்தக் காரணத்திஞல், தலைமை அமைச்சர் இந்திரா காந்தியார் அவர்கள், ‘சுதந்தரம் பெற்றுள்ள மோரீஷியஸ் தீவிலிருக்கின்ற மக்களுடன் நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ளத் தமிழகமே ஏற்றது’ என முடிவுகட்டி, தம் விருப்பததைத் தமிழக முதலமைசசர் அண்ணு அவர்களுக்கு அறிவித்துள்ளார். முதலமைச்சர் அவர்களும், அத்தகைய சிறந்த பணியை மெச்சத்தக்க வகையில் திறம்பட ஆற்றக்கூடிய அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்களிடம் ஒப்படைத்திருக்கின்ருர்.

மோரீஷியஸ் தீவின் அரசு விருந்தினராகவே நமது அமைச்சர் அங்கு செல்லுகின்ருர். அமைச்சருக்காகும் செலவுகள் அனைத்தையும், அந்த நாட்டு அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருக்கிறது

தமிழகத் தலைநகரில் இவ்வாண்டுத் துவக்கத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு அந்த நாட்டிலிருந்து சிலர் வந்திருந்தனர். மாநாட்டில் கலந்துகொண்ட அவர்கள், ‘இங்கே நமது நாட்டைப் பற்றியும், மொழியைப் பற்றியும், நமது பண்டைய கலாச்சாரத்தைப் பற்றியும், நமது முன்னேர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பது பற்றியும் மாநாட்டின் மூலம் மிக நன்ருக அறிந்து’ தங்கள் தாயகம் திரும்பியுள்ளனர். மாநாட்டின் தொடர்பாக நடத்தப்பட்ட ஊர்வலக் காட்சிகளைக் கண்டு புத்துணர்ச்சி பெற்று சொந்த நாட்டுக்குச் சென்றிருக்கின்றனர்.

அம்மாநாட்டின் தொடர்பாக நடைபெற்ற மகத்தான ஊர்வலக் காட்சியை மீண்டும் ஒருமுறை கண்டு களித்திடவும், தங்கள் முன்னேர்கள் வாழ்ந்த சீர்மிக்க வாழ்க்கையை மறுபடியும் கண்டு புதிய தெம்பு பெற்றிடவும், அமைச்சர் அவர்கள் தம்முடன் கொண்டு செல்லும் ஊர்வலக் காட்சிகள் அடங்கிய வண்ண நிழற்படம் துணைபுரியும்.

அமைச்சர் அவர்கள் தம்முடன் ‘திருக்குறள்’ உலகத் தமிழ் மாநாட்டு மலர், கைத்தொழில் நுணுக்கப் பொருட்கள், முதலமைசர் அண்ணு அவர்கள் எழுதிய அரசியல் தொடர்பில்லாத கருத்தோவியங்கள்’ முதலியவற்றையும் எடுத்துச் செல்லுகின்ருர். அவை அனைத்தையும் அங்குள்ள தமிழ் மக்கள் மிக்க ஆர்வத்துடன் வரவேற்பர்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் ஜூன் 4-ம் நாள் முதல் 11-ம் நாள்வரையில் அரசு விருந்தினராக மோரீஷியஸ் தீவில் தங்கி, அங்குள்ள தமிழ் மக்களுடன் அளவளாவி நல்லுறவுக்கு வழி காணப்போகின்ருர். பின்னர், மடகாஸ்கர் தீவின் தலைநகரிலிருக்கின்ற தமிழ் மக்கள் தரவிருக்கின்ற வரவேற்பில் கலந்துகொண்டுவிட்டு, பின்னர் கெனியா நாட்டின் தலைநகரான நைரோபி சென்று அங்குள்ள தமிழ் மக்களையும் சந்தித்துவிட்டுத் தமிழகம் திரும்பப் போகின்ருர்.

தமது பயணம் பற்றிச் செய்தியாளர்களைத் தாம் சந்தித்த பொழுது—செய்தியாளர் ஒருவர் நினைவுறுத்தியதற்கொப்ப—‘தமிழகக் கைத்தறித் துணிகளை அத்தீவுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பிருக்கிறதா’ என்பதை ஆராயப்போவதாகவும் அமைச்சர் அறிவித்துள்ளார்; இத்துறையில் அமைச்சர் அவர்கள், தமது அறிவாற்றல் அனைத்தையும் பயன்படுத்தி, கைத்தறி ஆடைகளின் ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்திடல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிருேம்.

இத்துறையில் அமைச்சர் மேற்கொள்ளக்கூடிய பணி, அவருடைய பயணததுக்குச் சிகரமாக அமைந்திடும். நமது கைத்தறித் தொழிலுக்கு ஆக்கந்தரக்கூடிய இப்பணியை, அமைச்சர் அவர்கள் திறம்படச் செய்து முடிப்பார்கள் என்பதில் நமக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

மோரீஷியஸ் தீவுக்குச் சென்று வாருங்கள்! செல்லுகின்ற இடமெல்லாம் தமிழ் மணத்தைப் பரப்பி வாருங்கள்!

“ஏற்றுக்கொண்ட பணியை வெற்றிகரமாக முடித்துவிட்டோம் – என்ற மனநிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் தாயகம் திரும்பவேண்டும்” என வாழ்த்துகிருேம்.

—கா. க.

‘தவருன எண்ணம் உருவாகுவதற்கு முயற்சிக்கின்றனர்’

‘உலகத் தமிழ் மாநாட்டுக்குக் கோடிக்கணக்கில் பணம் வசூலானதாகக் கூறுவது தவருனதாகும்’

செய்தியாளர்களிடம் முதலமைச்சர் அண்ணு விளக்கம்

சென்னை, ஜூன் 3—

“‘உலகத் தமிழ் மாநாட்டுக்காகப் பல கோடி ரூபாய் வசூலிச்கப்பட்டது’ என்ற தவருன எண்ணத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

“மாநாட்டுக்கென நிதி வசூலித்ததில் நிர்ப்பந்தம் நிலவியதாகக் கூறப்படுகிறது; இது, எந்த அரசு மீதும் கூறப்படும் புகார்களாகும். இவ்வளவு நாள் கழித்து இந்தப் பிரச்சினை கிளப்பப்படுவது ஏன்? ‘இந்த விழாக்கள் அவசியமற்றது’ என்று காலங் கடந்து கூறுவதா? இதெல்லாம் ஒருவருடைய விருப்பத்தைப் பொறுத்ததா, என்ன?

“மாநாட்டுக்காக ஒவ்வொரு மாவட்டக் கலெக்டரும் நிதி வசூலித்ததாகச் சொல்லுவது தவறு; ஒவ்வோராண்டும் மாவட்டக் கலெக்டர்கள், ‘நல நிதி’க்காகப் பணம் வசூலிப்பர்; இந்த ஆண்டில் அத்துடன், உலகத் தமிழ் மாநாடும் சேர்ந்துகொண்டது; வசூலில் ஒரு பகுதிதான் மாநாட்டுக்கு அனுப்பப்பட்டது.

“மாவட்டக் கலெக்டர்களிடமிருந்து மாநாட்டுக்குக் கிடைத்த 16 இலட்சத்தில், திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காகச் சென்னை—அண்ணுமலை—மதுரைப் பல்கலைக் கழகங்களுக்கு ரூ. 9 இலட்சம் நன்கொடை வழங்கப்பட்டிருக்கிறது.

“தமிழ் மாநாட்டையொட்டி நிறுவப்பட்ட சிலைகள் அனைத்திற்குமான செலவை அரசு ஏற்றுக்கொண்டது என்று நினைப்பது தவருகும். கண்ணகி சிலை நீங்கலாக மற்ற சிலைகளையெல்லாம் தனிப்பட்டவர்களே நனகொடையாக வழங்கினர்.

“மாநாட்டு ஊர்வலத்திற்காக இலட்சக்கணக்கில் பணம் செலவானதாக மற்ருெரு தவருன எண்ணம் நிலவுகிறது. அலங்கார வண்டிகளையெல்லாம் சினிமா ஸ்டியோக்களே இலவசமாகத் தந்தன; அரசுக்கு ரூ. 75,000-தான் செலவு ஏற்பட்டது.

“என்னுடைய இந்தத் தகவல்களையெல்லாம், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு அளிக்கும் பதிலாக மேற்கொள்ள வேண்டாம்; ‘பொதுமக்களுக்கு அளிக்கப்படும் தகவல்’ என்று கூறப்படுவதையே நான் விரும்புகிறேன்.

“இதைவிடப் பெரிய பிரச்சினைகளை சி. சுப்பிரமணியம் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்; செயற்கை இழை நூல் பற்றி பற்றி அவர் கூறியிருக்கிருர்; இதுபோன்ற பிரச்சினைகளைத்தான் எதிர்பார்க்கிறேன. அவர் தம்முடைய ‘தகுதி’யை சில வேளைகளில் மறந்துவிட்டாலும், அவருடைய ‘தகுதி’யை நான் அலட்சியம் செய்ய விரும்புவதில்லை; அதனுல்தான். அவரிடமிருந்து இன்னும் முக்கியமான பிரச்சினைகளை--விவாதத்தை எதிர்பார்க்கிறேன்.

“உலகத் தமிழ் மாநாட்டின் தணிக்கை செயயப்பட்ட வரவு--செலவுக் கணக்கு விவரங்கள் ஜூன் 15-ந் தேதி வாக்கில் வெளயிடப்படும்”

இவ்வாறு முதலமைச்சர் அண்ணு அவர்கள், உலகத் தமிழ் மாநாடு பற்றிக் கூறப்படும் தவருன குற்றச்சாட்டுக்களை மறுத்து விளக்குகையில் செய்தியாளர்களிடம் தெள்ளத் தெளியத் தெரிவித்தார். செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு முதலமைச்சர் அண்ணு அவர்கள் அளித்த பதில்களும் இங்கு தரப்படுகிறது :—

கேள்வி :—“உலகத் தமிழ் மாநாட்டு நிதிக்கென பலவந்தப்படுத்தி வசூல் செய்யப்பட்டதா?”

அண்ணு :—“இது பழங்காலத்திலிருந்து கூறப்படும் குற்றச்சாட்டு வகையைச் சார்ந்தது. ‘பலவந்தமாக வசூல் செய்தார்கள்’ என்று நாங்கள் எதிர்க்கட்சியாயிருந்து குற்றஞ்சாட்டியபோது அவர்கள் என்ன கூறினுர்கள் என்பதையும் நினைத்துப் பார்க்கவேண்டும். ‘சிறு சேமிப்புக்காககூடப் பலவந்த வசூல் செய்யப்பட்டது’ என்று குற்றஞ்சாட்டிய காலம் உண்டு. ஆனுல், என்னிடம் குறிப்பிட்ட அதிகாரி, எங்கு -- இப்படிப் பலவந்தப்படுத்தி வசூல் செய்தார் [illegible] குறிப்பிடுப் புகார் தந்[illegible] அது பற்றி ஆராயத் தயாராக இருக்கிறேன்.”

கேள்வி :—“நடவடிக்கை எடுப்பீர்களா?”

அண்ணு :—‘ஓ’ நடவடிக்கை எடுக்கத் தயார்!”

கேள்வி :—“அந்த நிதியை, கட்சிக்கெனப் பயன்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறதே!”

அண்ணு :—“அது தவருன குற்றச்சாட்டு; அப்படியேதும் நடக்கவில்லை.”

கேள்வி :—“அரிசிக் கடையிலும், மற்ற இடங்களிலும் கட்டாயப்படுத்தி நிதி வசூல் செய்யப்பட்டது என்கிருர்களே!”

அண்ணு :—“இதுபோன்ற யூகங்களில் பேசுவது நல்லதல்ல; குறிப்பிட்ட திட்டவட்டமான புகார்களைக் கூறுவதுதான் முறை.”

கேள்வி :—“மாநாட்டையொட்டி ஊர்வலம், பூம்புகார் விழா ஆகியவற்றை நடத்தியது தேவையற்றது என்கிருர்களே!”

அண்ணு :—“இது, காலம் கடந்த குற்றச்சாட்டு; இவையெல்லாம் நல்லமுறையில் நடந்து முடிந்துவிட்டன; மக்களும் அதற்கு நல்ல வரவேற்பு தந்தார்கள். அந்த விழாக்களில் முன்னுள் முதலமைச்சர் கலந்துகொள்ளவில்லையா? முன்னுள் காங்கிரசுத் தலைவர் காமராசர் கலந்துகொள்ளவில்லையா? அப்போதெல்லாம் இது பற்றிப் பேசவில்லையே!”

கேள்வி :—“குடியரசுத் தலைவர் கூட கலந்துகொண்டார்.”

அண்ணு [illegible] லையு[illegible] மிக்க [illegible] அல்ல[illegible] வது [illegible] — கே[illegible] றப் பொறு[illegible] யில் நான், சுட[illegible] தித்தபோது [illegible] கலையுணர்வு [illegible] குறைவு’ என[illegible] அதனுல்தானே [illegible] ஊர்வலத்தை அவர் [illegible] கிருர்; ஆனுல், நான் அப்படி நினைக்கவில்லை; நான் அதை, ‘அவசியமானது’ என்று நினைக்கிறேன்.”

விசாரணையை வெளியிடுவது சரியா?

கேள்வி :—“சென்னையில் நடந்த தீ விபத்துக்கள் பற்றிய விசாரணையை வெளியிடவில்லை என்கிருர்களே!”

அண்ணு :—“அதுபற்றிய வழக்கு அப்பீலில் இருக்கிறது; ஆகவே, இப்போது அதை வெளியிடுவது சரியல்ல.”

செஞ்சீனு துணியுமானுல்...

இந்தியாவுக்குத் துணை நிற்போம்

மலேசிய[illegible] மைச்சர்

[illegible] மா[illegible] துணைநிற்க மீண்டும் ம[illegible] சியா தயாராக இருக்கும்”

என்று, மலேசியத் தலைமையமைச்சர் துங்கு அப்துல் ரகிமான் உறு[illegible] கூறியுள்ளார்.

மத்திய அரசுப் பள்ளிகளில் இந்தித் திணிப்பு....

‘எந்தவிதக் கொள்கையை இந்திய அரசு கையாளுகிறது?’

--மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் க. அன்பழகன்

‘இந்தப் பிரச்சினை முழுவதையுமே மறுஆய்வு செய்துவருகிறேன்’

--மத்திய கல்வி அமைச்சர் திரிகுண சென்

புதுடில்லி, ஜூன் 2—

மத்திய அரசு நடத்தும் பள்ளிகளில், 6-வது வகுப்பு வரையில் ஆங்கிலத்திலும் இந்தியிலும் சொல்லித் தரப்பட்டுவந்த சமூக இயல் பாடங்களை, இந்த ஆண்டு முதல் இந்தியிலேயே சொல்லித் தருமாறும், மற்ற வகுப்புகளுக்கும் மேற்கொண்டு அவசியம் பயன்படுத்துமாறு அனுப்பப்பட்ட ‘சுற்றறிக்கை’ பற்றி மறுஆய்வு செய்வதென மத்திய கல்வி அமைச்சர் தீர்மானித்திருக்கிறாராம்!

இந்தச் ‘சுற்றறிக்கை’ பற்றி வெளியிடப்பட்ட பல்வேறு கருத்துக்களையும் கருதி, இது சம்பந்தமாக 1962-ம் ஆண்டில் மத்திய அமைச்சரவை செய்த முடிவைக் கருத்தில்கொண்டு, இந்தப் பிரச்சினை முழுவதையுமே மறுஆய்வு செய்வதென மத்திய கல்வி அமைச்சர் முடிவுசெய்திருக்கிறாராம்!

சந்தேகங்கள் நிலவுவது அமைச்சருக்குத் தெரியுமாம்

“மாணவர்களில் எந்தப் பிரிவினருக்கும் தொல்லை ஏற்படக்கூடாது என்ற நோக்கத்துடன், மத்திய அரசுப் பள்ளிகளின் பயிற்றுமொழிப் பிரச்சினை முழுவதையும் மறு ஆய்வு செய்துவருகிறேன்”

என்று, கல்வியமைச்சர் திரிகுண சென், மக்களவை தி. மு. க. குழுத் தலைவர் திரு. க. அன்பழகன் அவர்களுக்கு எழுதியுள்ள மடலில் தெரிவித்திருக்கிறார்.

“மத்திய அரசப் பள்ளியின் சில வகுப்புகளில் பயிற்றுமொழியாக ஆங்கிலம் இருப்பதை இந்தியில் மாற்றுமாறு சுற்றறிக்கை அனுப்பியிருப்பது, நாடாளுமன்றக் கல்விக் குழுவின் முடிவுக்கு எதிரானதாகும்; இதுபற்றி அரசின் நிலை என்ன?”

என்பதை விளக்குமாறு கேட்டு திரு. க. அன்பழகன் அவர்கள், மத்திய கல்வி அமைச்சருக்கு எழுதியிருந்தார்.

கல்வியமைச்சர் திரிகுண சென் எழுதியிருந்த பதிலில் குறிப்பிட்டிருப்பதாவது:—

“மத்திய பள்ளிகள் நிறுவனம் அனுப்பிய சுற்றறிக்கை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது; துரதிருஷ்டவசமாகச் சில வட்டாரங்களில் இது பற்றிச் சில சந்தேகங்கள் இருந்துவருவது எனக்குத் தெரியும்; இந்தப் பிரச்சினை முழுவதும் பற்றி மறு ஆய்வு நடைபெற்றுவருவதால், இதுபற்றித் தாங்கள் யோசனைகள் தெரிவிக்கலாம்.”

‘பெரும் அச்சம் நிலவுகிறது’-- க. அன்பழகன் மடல் விவரம்

பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், மத்திய கல்வியமைச்சருக்கு எழுதியுள்ள மடலில் கூறியிருப்பதாவது:—

“மத்திய அரசு ஊழியர்களாக உள்ள இந்தி பேசாதவர்களும், அவர்களுடைய குழந்தைகளும், மத்திய அரசின் இந்த இந்தித் திணிப்பு உத்தரவின் விளைவாக பாதிக்கப்பட்டே தீருவார்கள். இது சம்பந்தமாக அதிகாரபூர்வமான விளக்கமும், உறுதிப்பாடும் தேவை.

“சுற்றறிக்கையின் வாசக[illegible] செய்தித்தாள்களில் வெளிவந்திருக்கிறது; இதன் காரணமாக, இந்தி பேசாத பகுதி மக்களிடையே பெரும் அச்சம் நில[illegible]

[illegible]து என்ப[illegible] நாங்கள் [illegible]தெரிந்துகொள்ள இயலும்; இந்தி பேசாத பகுதி மக்களுக்கு இதுபற்றி விளக்கம் கிடைக்கும்.

“இந்தப் பயிற்சிமொழி மாற்றம் சம்பந்தப்பட்டவகையில், மத்திய அமைச்சகத்திலுள்ள பகவத் ஜா ஆசாத் அவர்கள், இந்தி பேசாத பகுதி மக்கள் மீது இந்தியைத் திணிப்பதில் மிகவும் தீவிரம் காட்டுகிறார் என்றே தோன்றுகிறது.”

உதவி அமைச்சர்கட்கு ரூ. 1000 ஊதியம்!

அமைச்சருக்குரிய அளவிலேயே படிச் செலவும் பெறுவார்களாம்

பெங்களூர், மே 31—

மைசூர் மாநில அமைச்சரவையிலுள்ள உதவி அமைச்சர்களுக்கு ரூ 1,000 சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர்களைப் போலவே உதவி அமைச்சர்களும் படிச் செலவு பெறுவார்களாம்.

உதவி அமைச்சர்களுக்குச் சம்பளமும் அலவன்சும் தருவதற்கு இப்போதுள்ள சட்டத்தில் எவ்விதப் பிரிவும் இல்லை; எனவே, அவர்களுக்கு ஊதியமும் படிச் செலவும் தருவதற்கு வசதி செய்வதற்காகச் சட்டத்தைத் திருத்துவது பற்றி சட்டத் துறை, பரிசீலனை செய்துவருகிறதாம்.

தமிழகத்தில் ஆட்சிப் பொறுப் பேற்றுள்ள சழக அமைச்சர்கள் ரூ. 500 மட்டுமே மாத ஊதியம் பெறுவதும், காங்கிரசு ஆளும் மைசூரில் உதவி அமைச்சர்கள்கூட ரூ. 1,000 ஊதியம் பெற வசதியாகச் சட்டத்தையும் திருத்த முனைந்திருப்பதும் சிந்திக்கத்தக்கது.

அமைச்சர் கருணாநிதியை தாக்க முயன்றனர் காங்கிரசார்!

பயணிகள் விடுதிமீது சரமாரியாகக் கல்வீச்சு

பொதுமக்களும் போலீசாரும் சூழ்ந்துகொண்டதால் வெறியர்களின் முயற்சி பயனற்றுப்போயிற்று

பேராவூரணி, ஜூன் 1—

பேராவூரணி பயணிகள் விடுதியில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்களைத் தாக்க முயன்ற காங்கிரசுக் குண்டர்களில் 47 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கறுப்புக் கொடிகளுடன் கூட்டமாக வந்த அந்த காங்கிரசுக் குண்டர்கள், அமைச்சர் தங்கியிருந்த பயணிகள் விடுதியை நோக்கிக் கல்லெறிந்தனர்; பயணிகள் விடுதியின் கதவை உதைத்துத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து அமைச்சரைத் தாக்க முயன்றனர்; உடனிருந்த தோழர்கள், அவர்களின் முயற்சியைத் தடுத்து நிறுத்தியதால், தாக்குதலினின்றும் அமைச்சர் தப்பித்துக்கொண்டார்.

வெறியாட்டம் மிகுந்து-- அமைச்சரைத் தாக்கும் குறிக்கோளுடன் குழுமியிருந்த அந்தக் காங்கிரசுக் குண்டர்களில் ஒரு பிரிவினர் அமைச்சர் தங்கியிருந்த அறையை நோக்கிச் சரமாரியாகக் கல்வீசினர்; இன்னொரு பிரிவினர், பயணிகள் விடுதிக்குள் நுழைந்தனர்; அவர்களைத் தஞ்சை மாவட்ட தி.மு.க. செயலாளர் மன்னை ப. நாராயணசாமியும், பேராவூரணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தியும் தடுக்க முயற்சித்தனர்; ஆனால் அந்தக் காங்கிரசுக் குண்டர்கள் அவர்களிருவரையும் தாக்கி, அமைச்சர் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த அறையை நோக்கி முன்னேறினர்.

இந்த நேரத்தில் போலீசாரும், பொதுமக்களும், அந்தக் காங்கிரசுக் குண்டர்களைச் சூழ்ந்து [illegible]ண்டு[illegible] அவர்களு[illegible]விட்டது [illegible]200 காங்[illegible] [illegible]போலீசார் [illegible] தெரிய[illegible]

[illegible]படுவது [illegible] முறையா?

[illegible] சம்பவம் பற்றி அமைச்[illegible] கருணாநிதி அவர்கள் கூறியிருப்பதாவது:—

“போலீசாரும், பொதுமக்களும் உரிய நேரத்தில் வந்திராவிடில், கறுப்புக் கொடியுடன் வந்திருந்தவர்கள், என்னைத் தாக்கும் முயற்சியில் வெற்றிபெற்றிருப்பார்கள்.

“அமைச்சர்கள் வரும் வழியில் அமைதியாக நின்று முழக்கம் எழுப்பி -- எதிர்ப்பை வெளிப்படுத்துவதுதான், சனநாயக முறையில் கறுப்புக் கொடி காட்டுவதற்கு இலக்கணமாகும்

“அமைச்சர்கள் தங்கும் இடத்தைச் சூழ்ந்துகொண்டு அவர்களைத் தாக்கும் அளவுக்குத் திட்டமிட்டுச் செயல்படுவது, சனநாயக முறையாகாது.”

மூடப்படும் ஆலை திறக்கப்படுகிறது

1,8[illegible] தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்

விட்டுத்தரும் மனப்பான்மையால் ஏற்பட்ட உடன்பாடு

கோவை, ஜூன் 2—

முதலமைச்சர் அண்ணா—தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோருடன் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாக, கோவையில் மிகப் பழமையானதும், பெரிய பஞ்சாலைகளில் ஒன்றானதும், கடந்த 18 திங்களுக்கு மேலாக மூடப்பட்டிருப்பதுமான காளீசுவரா ஆலை, ஜூலைத் திங்களுக்குள் திறக்கப்பட்டுவிடும்; ஆலை முதலாளிகளின் முயற்சியாலும் தொழிலாளர்கள் விட்டுத்தரும் தன்மையாலும் இந்நிலை உருவாகியிருக்கிறது.

தனித் துணைத் தொழிலாளர் நல ஆணையர் திரு. கமலரத்தினம் முன்னிலையில், நிர்வாகத்தினருக்கும் – தொழிலாளர் சங்கத்தினருக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது.

ஒப்பந்தத்தின்படி, மூடப்பட்ட ஆலையின் 1,800 தொழிலாளர்களும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவர்.

தொழிலில் நெருக்கடி தீரும் வரையில், ஆயில் நெசவுப் பிரிவில் வாரத்திற்கு 6 நாட்களும், நூற்புப் பிரிவில் நாலரை நாட்களும், ரீலிங் பிரிவில் நான்கு நாட்களும் மட்டும் வேலை நடைபெறுவது என்பதைத் தொழிலாளர் தரப்பினர்—விட்டுத்தரும் தன்மையுடன் — ஒப்புக்கொண்டனர்.

இந்த ஆலையைத் திறந்து நடத்த பாங்கி ஒன்று ரூ. 25 இலட்சம் கடன் தர அரசு உத்தரவாதம் அளித்திருக்கிறது. இந்தத் தொகை கிடைத்தவுடன், தொழிலாளர்களின் பழைய சம்பளப் பாக்கியை இரண்டு வார காலத்திற்குள் தருவதென ஒப்புக்கொள்ளப்பட்டது.

துவக்கக் கட்டத்தில் சுமார் 23,000 கதிர்களும், 312 தறிகளும் இயக்கப்படும்.

தமிழக ஆலைகளில் உற்பத்தியாகி ....

ஏற்றுமதி செய்யப்படும் நூலுக்கு விற்பனைவரி இல்லை

தமிழக அரசு உத்தரவு உடனடி அமுல்--- அமைச்சர் கே. ஏ. மதியழகன் அறிவிப்பு

சென்னை, ஜூன் 2—

தமிழகத்திலுள்ள ஆலைகளில் உற்பத்தியாகி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நூலுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்துத் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

நேற்றுமுதல் அமுலுக்கு வந்துள்ள இந்த உத்தரவால், ஆலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, ஓரளவுக்கு நீங்குமெனத் தமிழக அரசு கருதுகிறது.

ஆலைத் தொழிலில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடிக்குக் காரணம், இந்த நூல் தேக்கம்தான்!

உற்பத்தியான நூல் தேங்கிக் கிடப்பதால், பல ஆலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன; இதன் விளைவாகத்தான் ஏற்றுமதியாகும் நூலுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்குத் தமிழக அரசு முடிவு செய்தது.

அமைச்சர் மதியழகன் தகவல் -- விளக்கம்

இதுபற்றி உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தெரிவிக்கையில் விளக்கியிருப்பதாவது:—

“பதிவு செய்த ஏற்றுமதியாளர்கள்மூலம் ஏற்றுமதி செய்யப்படும்போது, முதலில் விற்பனை வரியைக் கட்டாமல் அனுப்பிவிட்டு, 6-மாத காலத்திற்குள் அதற்கான ‘சர்டிபிகேட்’டுகளை விற்பனை வரி இலாகாவுக்குத் தரவேண்டும்.

“பதிவு செய்யப்படாத ஏற்றுமதியாளர்கள்மூலம் ஏற்றுமதி செய்யும்போது, முதலில் நூல் விலையுடன் விற்பனை வரியைச் சேர்க்கவேண்டும்; பின்னர், ஏற்றுமதியாளர்கள் அதற்கான சர்டிபிகேட்டுகளைக் கொடுத்து, அந்த விற்பனை வரித் தொகையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.”

சென்னையில் சமுதாய நலத் திட்ட மாநாடு

மத்திய -- மாநில அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்

சென்னை, மே 31—

ஜூன் 11, 12 ஆகிய நாட்களில் சமுதாய நலத் திட்ட மாநாடு சென்னையில் நடைபெறவிருக்கிறது

இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் மாநில முதலமைச்சர்களும், சமுதாய நலத் திட்டத் துறை — உள்ளாட்சித் துறை— கூட்டுறவுத்துறை ஆகியவற்றைச் சார்ந்த மாநில அமைச்சர்களும் கலந்துகொள்வர்.

பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் இம்மாநாட்டை, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் திறந்துவைப்பார்.

மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம், கூட்டுறவு சமுதாய நலத் துறை அமைச்சர் குருபாதசுவாமி ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்.

மாநாடு துவங்கும் முதல் நாளன்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், மாநாட்டில் கலந்துகொள்கின்ற அமைச்சர்களை வரவேற்று உரை நிகழ்த்துவார்.

உணவு மண்டல ஏற்பாடு எடுபடாது

மானிய நிறுத்தத்தில் உழவர்கட்குச் சிரமம் இருக்காதாம்

மத்திய உணவமைச்சர் ஜெகஜீவன்ராம் விளக்கம்

இந்தூர், மே 31—

‘இந்த ஆண்டில் விளைச்சல் பெரும் அளவில் இருக்கும் என்று எதிர்பார்த்தபோதிலும் உணவு மண்டலங்களை ரத்து செய்வதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை; கோதுமை, அரிசி ஆகியவற்றிற்கு மாநிலங்களிடையேயுள்ள கட்டுப்பாடுகளை நீக்கும் நோக்கமும் இல்லை”

என்று மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம் கூறியிருக்கிறார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

“ஏற்கனவே 10 இலட்சம் டன் உணவுத் தானியத்தை அரசு கொள்முதல் செய்திருக்கிறது. 60 இலட்சம் டன் இருப்பு வைத்துக்கொள்வதுதான் இலக்காகும்.

“மாநில அரசுகளுக்கு மானிய உதவியைத் திரும்பப் பெறுவதால், உழவர்களுக்குச் சிரமம் எதுவும் ஏற்படாது.”

வனஸ்பதியின் சில்லறை விலை நிர்ணயம்

புதுடில்லி, மே 31—

வனஸ்பதியின் அதிகபட்ச சில்லறை விலையை அரசு நிர்ணயித்திருக்கிறது.

இந்த நிர்ணயப்படி, தென் பகுதியில் வனஸ்பதியின் விலை கிலோவுக்குப் பத்து காசு குறைக்கப்படும்; இரண்டு கிலோ டின் விலை ரூ. 8 40.

வட பகுதியில் 10 காசு அதிகரிக்கும்.

'மத்திய அரசின் போக்கு மனவேதனையை தருகிறது'

'பிரச்சினையைத் தட்டிக் கழிக்க முயலுகிறது'

தாயகம் திரும்பிய தமிழர்கள் பர்மாவில் விட்டுவந்த சொத்துக்கள் -- டெல்லியின் அலட்சியம்பற்றி முதலமைச்சர் அண்ணு

சென்னை, சூன் 3—

"பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்கள் அங்கு விட்டுவந்த சொத்துக்களைத் திரும்பப் பெற்றுத் தர வேண்டும் என்று பலமுறை நேரடியாகவும், கடிதம் மூலமும் மத்திய அரசுக்கு நான் வலியுறுத்திவந்த போதிலும், என் முயற்சி பலனளிக்கவில்லை; இப்பிரச்சினையில் மத்திய அரசின் போக்கு, தட்டிக்கழிக்கும் முறையிலும், பிரச்சினையைத் தவிர்த்துவிட முயற்சிக்கும் நிலையிலும் இருக்கிறது; இதற்காக நான் பெரிதும் வருந்துகிறேன்"

என்று முதலமைச்சர் அவர்கள்; நேற்று செய்தியாளர்களின் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கேள்வி:—"பர்மா அரசு, ஒத்து வராத அரசாங்கமாக இருந்து வருகிறதே......"

அண்ணு:—"பர்மா — ஒத்து வராத அரசாங்கம்; சீனு— பிடிவாதமானது என்று கூறிக் கொண்டே போனுல், நாம் என்ன அரசாங்கமாக இருப்பது?"

களிடம் கேட்டபோது, அவர் குறிட்பிட்டதாவது:—

"இவர்களைக் குடியமர்த்துவதற்காகச் சில ஏற்பாடுகளைச் செய்துவருகிறோம்; கடலூரில் 5,000 ஏக்கர் நிலம் வசப்படுத்தப்பட்டிருக்கிறது; திருச்சி மாவட்டத்தில் சில இடங்கள் குடியமர்த்துவதற்காகவும், மலைத் தோட்டத் தொழிலுக்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

"அந்தமானில் அவர்களைக் குடியமர்த்தும் திட்டம் பற்றி மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது."

கேள்வி:—"நீங்கள், இலங்கைக்குச் செல்லப் போகிறீர்களா?"

அண்ணு:—"கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், இன்னும் இரண்டு திங்களுக்குள் இலங்கை செல்வார்; இலங்கை அரசின் அழைப்பின் மீதே அவர் அங்கு செல்கிருர்.

தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர்கள்

குடியமர்த்தும் திட்டம் பற்றி அண்ணு விளக்கம்

சென்னை, சூன் 3—

"இலங்கையிலிருந்து திரும்பி வரும் தமிழர்களைக் குடியமர்த்துவதற்கு என்ன ஏற்பாடுகள செய்திருக்கிறீர்கள்?"

என்று, நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில், முதலமைச்சர் அண்ணு அவர்

செலவில் நியாயமான பங்கை ஏற்க மத்திய அரசு மறுப்பு'

கேரளத்தின் கோரிக்கைகளுக்குக் கைவிரிப்பு

புதுடில்லி, சூன் 3—

உணவு உதவித் தொகைச் செலவில் நியாயமான பங்கை மத்திய அரசு ஏற்கவேண்டும் என்ற கேரள அரசின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துவிட்டது!

1968 - 69-ல், கேரள அரசுக்கு ரூ 16 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

இது சம்பந்தமாக மத்திய அரசின் நிலையை விளக்கி நிதி அமைச்சகம், சேரள அரசுக்குக் குறிப்பு ஒன்று அனுப்பியுள்ளதாக நம்பப்படுகிறது.

நடப்பு ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் சரிக்கட்டப்படாமல் விடப்பட்டிருக்கும் பெரும் பற்ருக்குறையை மத்திய அரசு சமாளிக்க வேண்டிருப்பதையும் நிதி அமைச்சகம் எடுத்துக்கூறியது

நிதி சங்கடங்களைச் சமாளிப்பதற்காகக் கூடுதல் பணம் வாங்கும் போக்கு குறித்தும் மாநில அரசை அக்குறிப்பு எச்சரித்திருக்கிறது.

கடன் நிவாரணம், பஞ்சப் படி உயர்வு போன்றவைமீது ஏற்படும் கூடுதல் செலவைச் சமாளிக்க இதர மாநில அரசுகள் தனி உதவி கோரியதும், அதனை மத்திய அரசு நிராகரித்ததும் நினைவிருக்கலாம்.

மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை

புதிய ஏற்பாடு குறித்து முதலமைச்சர் அண்ணு

தஞ்சாவூர், மே 31—

"மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது பற்றிய வழக்கு ஒன்றில் இந்தியத் தலைமை நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு மதிப்பளிக்கும் வகையில், இவ்வாண்டு சென்ற ஆண்டினைப்போல் மாவட்ட அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல், மாநில அளவிலேயே தேர்ந்தெடுக்கப்படுவார்கள்"

என்று இங்கு தமிழக முதலமைச்சர் அண்ணு அவாகள் ஒரு பேட்டியில் தெரிவித்தார்.

புதிய நிலச் சட்டம்

"குத்தகைதாரர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற வகையில் புதிய நிலச்சட்டம் ஒன்றைத் தமிழக அரசு நிறைவேற்றவிருக்கிறது; அந்த மசோதாவைத் தற்போது சட்ட அமைச்சர் மாதவன உருவாக்கிக் கொண்டிருக்கிருர்" என்றும்-அண்ணு அவர்கள் தெரிவித்தார்.

ROJA
ரோஜா பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

அங்கெல்லாம் செல்லுகின்ற நேரம் இதுவா?

சென்னை, சூன் 3—

"தாங்கள், சோவியத் யூனியன், ஐரோப்பா ஆகிய இடங்களுக்குச் செல்வதாக இருக்கிறீர்களா?"

என்று செய்தியாளர்சள், நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அண்ணு அவர்களை வினவினர்.

அண்ணு:—"இரஷ்யாவுக்கு வரும்படி எனக்கு, முன்பு அழைப்பு வந்தது; ஆனல், நான் இப்போது அங்கெல்லாம் செல்லும் நோக்கம் இல்லை. ஐரோப்பாவில் அரசியல் சூழ்நிலை மிக வெப்பமாக இருக்கிறதல்லவா?"

தீ விபத்துத் துயர் துடைப்பு நிதி

சென்னை, மார்ச் 31—

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்சப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக தமிழக முதலமைச்சர் திரட்டி வரும் நிதிக்கு மே 27-ந் தேதி வந்த தொகை ரூ. 2,021-57 ஆகும்.

இத்துடன் மொத்தம் ரூ. 37,90,174-92 சேர்ந்துள்ளது.

திருச்சி-லால்குடி-முசிறி வட்டங்களில் கி. மனேகரன்

எம்.பி சுற்றுப்பயணம்

சூன் 5 மாலை 6 மணி: துவாகுடி மலை; இரவு 8 மணி: பிச்சாண்டார்கோவில்.

சூன் 6 காலை 8 மணி: அந்தநல்லூர்; மாலை: கரூர்.

சூன் 7 மாலை 6 மணி: அல்லித்துறை; இரவு 8 மணி: திருவானைக்காவல்.

சூன் 8 மாலை 6-30 மணி: திருச்சி நகர்.

சூன் 9 மாலை 6-30 மணி: பெரம்பலூர்.

வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

சூன் 4: ஏனுதி; 5: திருநீலக்குடி; 6: திருவையாறு; 7: சிதம்பரம்; 8: நாகைப்பட்டினம்; 9: திருவேங்கடநாதபுரம்; 10: வள்ளியூர்; 11: திருவாப்பாடி; 15: துறையூர்; 16: துறையூர் வட்டம்; 17: வெண்ணுந்தூர்; 18: நள்ளிபாளையம்; 22: புதுச்சேரி; 23: வடக்கு பொய்கைநல்லூர்; 30: சென்னை— இராயபுரம். சூலை 2: வரட்டைப் பள்ளி; 4: அந்தியூர்; 6: இருகூர்.

குழுக் கூட்டம்

கோவை நகர புதிய 8-வது வட்டார எஸ். எஸ். ஆர். மன்ற உறுப்பினர் கூட்டம் 4-6-68 இரவு 9-மணிக்கு வட்டார தி. மு. க. பொருளாளர் ஏ. என். இராசன் இல்லத்தில் நடைபெறும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனிமைச் சிறையில் 63 நாட்கள் வைக்கப்பட்டிருந்த கொடுமை, எல்லோர் நினைவிலும் இருந்துவருவதாகும்.

கழகம் நடத்திய அறப் போராட்டங்களில் மட்டுமன்றி, தேர்தல் போராட்டத்திலும் ஆளுங்கட்சியான காங்கிரசுக் கட்சியினர் கையாண்ட நேர்முக — மறைமுகத் திருவிளையாடல்கள் அனைத்தையும் சமாளிக்க வேண்டியவரானுர்— திரு. கருணுநிதி. 'எப்படியும் தோற்கடித்தே தீருவது' என்று முனைந்து சகல வித்தைகளையும் செய்து பார்த்தும், காங்கிரசார், ஒரு தேர்தலில்கூடத் தோழர் கருணுநிதியை வீழ்த்த இயலவில்லை!

1962 தேர்தலில் மலையுடன் மோதுவதுபோல், பெரிய புள்ளியான பரிசுத்த நாடாருடன் மோதி, தஞ்சையில் வெற்றிகண்டார் கருணுநிதி; அதற்கு முந்திய தேர்தலில் கழகமே சரிவர வளர்ந்திராத பகுதியான குளித்தலைத் தொகுதிக்குச் சென்று போட்டியிட்டு வாகை சூடி வந்தார்.

1967 தேர்தலில். சென்னை—சைதைத் தொகுதியில் போட்டியிட்டபோது, கோட்டூர் – அடையாற்றில் வஞ்சகர்கள், நம் கலைஞரின் உயிரையே பறித்துவிடுகிற கொலைபாதகச் சதியில் ஈடுபட்டதை இன்று நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகிறது.

திரு. கருணுநிதி அவர்கள் சட்டமன்ற எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்தபோது தமது நாவன்மையாலும், வாதத் திறமையாலும், அமைச்சர்களைப் பல முறை திணறடித்திருக்கிருர். ஆட்சியாளர்களின் ஊழல்களை அம்பலப்படுத்தியிருக்கிருர்; அமைச்சர்களின் விஷமத்தனமான பதில்கட்கும் சூடான மறுபதில் தந்து, உண்மையை நிலைநாட்டியதுடன், கழகம் சிறந்த சனநாயக அமைப்பு என்பதை நிலைநாட்டுவதிலும் சிறந்த பங்காற்றியிருக்கிருர்.

தலைமைக் சழகத்தில் பொருளாளர் என்ற முறையில் திரு. கருணுநிதி அவர்கள், சழகத்திற்குத் தேவையான பொருளைத் திரட்டுவதிலும், அதனைத் தக்க வழியில் செலவிடுவதிலும், கழகத்துக்கெனச் சொத்துக்களைச் சேர்த்து அவற்றைக் கட்டிக் காப்பதிலும் அவர் காட்டிய அக்கறை -- ஆர்வம் -- செயல் திறம் ஆகிய அனைத்தும் குறிம்பிடத்தக்கனவாகும். கருணுநிதியே 'கழக நிதி' என்று சொல்லும்படியாக, தமது பொறுப்பை நிறைவேற்றிவருகிருர்.

எந்தத் துறையில் ஈடுபட்டாலும் தமக்கென ஒரு தனி வழியை வகுத்துக்கொண்டு செயலாற்றி, அந்தத் துறையில் பெரும் புகழைத் தட்டிக்கொள்ளும் ஆற்றல்மிகு கருணுநிதி அவர்கள், தமிழக அரசின் பொதுப் பணித் துறை அமைச்சராகவும், போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்று, அந்தத் துறைகளிலும் அரும் பணிகள் பல ஆற்றி, நாட்டு மக்களின் பாராட்டை பெற்றுவருவதில் வியப்பென்ன இருக்கிறது?

பள்ளி மாணவப் பருவத்தில் பொதுப் பணியில் ஈடுபட்ட கருணுநிதி அவர்கள், இன்று 44-வயதைக் கடந்து 45-வது வயதில் அடியெடுத்து வைக்கிருர்.

இந்த வயதில் தம் சொந்த வாழ்க்கையிலும், பொது வாழ்விலும் எண்ணற்ற இன்னல்கட்கும், இடையூறுகட்கும் ஆளாகி, ஓர் இலட்சிய வீரர் என்ற பாராட்டுக்குரியவராகத் திகழும் திரு. கருணுநிதி அவர்கள், இன்னும் பல்லாண்டுகள் எல்லா நலனும் வளமும் பெற்று வாழவேண்டும் என்ற நமது விழைவைத் தேரிவித்துக்கோள்கிறேம்.

வாழ்க கலைஞர் — பல்லாண்டு! வளர்க — வேல்க — அவர் தோண்டு!

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

5--6--68

பிச்சாண்டார்கோவில்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு; தலைவர்: பெ. மருதமுத்து; பேசுவோர்: கி. மனேகரன் எம்.பி., அன்பில் தர்மலிங்கம், வி. எம், கணேசன், சி. பரமசிவம்.

பண்டசோழநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: வி. பாலகிருட்டினன்; கொடியேற்றுபவர்: எஸ். ஆறுமுகம் பி.காம்.; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., எம். ஏ. சண்[illegible] சி. பி. [illegible] பி.எல். [illegible] கேயன் [illegible] பந்தம் [illegible]ணு, மற்று[illegible]

சேந்தமங்க[illegible]

தி. மு. க[illegible] முத்து எம்.எல்.[illegible] பாராட்டு; இரவு 7-[illegible] பெருமாள் கோயில் [illegible]தில்; தலைவர்: பூ அழகப்பன்; பாராட்டுவோர்: பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., ந. வீராசாமி எம்.எல்.ஏ. ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., க. இராசாராம் எம்.பி., மு பழவேலன், ப. க. தமிழழகன், ஆர். எம். பழனிமுத்து, அ. இளங்கோ, வெ. கிருட்டிணன், டி. என். சுப்பிரமணியம், ம இராமசாமி, ஆ. நடராசன், ஐ. இராமசாமி, ந. சந்திரசேகரன், நல்லமுத்து, அரங்கசாமி, எம். கே. இராமசாமி, ப. வையாபுரி, பூ. வருதப் பெருமாள்.

அந்தியூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: அ. கா. குருசாமி; பேசுவோர்: பி. ஏ. சாமிநாதன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு. சின்னுச்சாமி, ஏ. எம். இராசா, ஈ. எம். நடராசன், மற்றும் வெற்றிவேல் உள்ளிட்டபலர்.

கோவை

7-வது வட்டார தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு தண்டு மாரியம்மன் கோயில் பின்புறத்தில்; தலைவர்: என். நாச்சிமுத்து; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., எஸ்.ஏ. இராசமாணிக்கம் எம்.சி., எம். எஸ். தேவசகாய[illegible] [illegible]கோபால், [illegible]

திராவிட முன்னேற்றக் கழகத்தி[illegible] திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.[illegible] அவர்கள் ஆசிரியராகவும், வெளியி[illegible]பவராகவும், அச்சிடுபவராகவும் கொண்[illegible] அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராய[illegible] செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்[illegible] வெளியிடப்பெற்றது.